விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 182 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 04 திங்கட்கிழமை (19.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

உள்ளூராட்சி தேர்தல்

## மீண்டும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான நிதியினை வழங்குமாறு, அரசாங்க திறைசேரி செயலாளரிடம் அடுத்த வாரம் மீண்டும் கோரிக்கை ஒன்றை முன்வைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிஹேவா சிங்கள ஊடகமொன்றிற்கு தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலைமை தற்போது, குறிப்பிட்ட மட்டத்தில் இருப்பதாக அரசாங்கமே அறிக்கைகளை வெளியிடுவதால் இந்த கோரிக்கை விடுக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நிதியினை வழங்குமாறு 02

நயினாதீவு

## நாகபூசணி அம்மனுக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)



அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடம் என போற்றி வழிபடாற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நயினாதீவு ஸ்ரீ நாக 11

## அத்தியாவசிய பொருட்களின் பட்டியலில் கோதுமை மா



(கொழும்பு)

கோதுமை மா அத்தியாவசியப் பொருளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளீன் பெர்னா 11

நாட்டில் இரு சட்டங்கள்

# ஒன்று புத்த சாசனம் மற்றையது அரச சட்டம்

## மார்தட்டுகிறார் அமைச்சர் விதுர



(கொழும்பு)

நாட்டில் இரு சட்டங்கள் உள்ளன. அதில் ஒன்று புத்த சாசனம். மற்றையது அரச சட்டம். எத்தனை அழுத்தங்கள் வந்தாலும் புத்தரின் போதனைகளின்படியே பணிகளை முன்னெடுப்பேன் என புத்தசாசன, மத கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் பரவலாக மழை பெய்யும்

வளிமண்டலவியல் திணைக்களம்

(கொழும்பு)

அடுத்து வரும் 24 மணித்தியாலங்களில் நாட்டின் பல மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் இந்த 11

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு

## கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களே இணைத் தலைவர்களாக செயற்படுவர்



கூட்டத்தில் தீர்மானம்

(வவுனியா)

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தலைவர் இல்லை எனவும், இணைத் தலைவர் 11

## இலங்கையருக்கு மாதம் 13,777 ரூபாய் போதும்

இலங்கை மத்திய வங்கி

(கொழும்பு)

இலங்கையில் நபர் ஒருவரின் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாதாந்தம் 13,777 ரூபாய் போதும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள (2022/2023) ஆண்டறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வருமானத்தை ஈட்ட முடியாதவர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் 11

வல்லையில் விபத்து

## பாலத்துக்கு வெளியே பாய்ந்தது வாகனம்



(கரணவாய்)

நேற்று அதிகாலை முதல் குடா நாட்டில் நிலவிய மழையுடனான காலநிலையினால் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் பருத்தித் 02



## குருந்தூரில் தமிழர்களை குடியேற்ற முடியாது

காற்றில் பறந்தது ஜனாதிபதியின் உத்தரவு

03ஆம் பக்கம் பார்க்க

## பெரமுனவில் இருந்து வெளியேறவுள்ள 25 எம்.பிக்கள்

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பிலான கலந்துரையாடல்களில் ஸ்ரீலங்கா பொதுஜன 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அனைத்து தமிழ்த் தரப்பும் ஒருமித்த குரலில் பேச வேண்டும்

## சுரேஸ் பிறேமச்சந்திரன்

அரசாங்கத்துடன் எதிர்காலத்தில் பேசுகின்ற போது ஒருமித்த குரலில் பேச வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைய நாங்கள் அந்த விடயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து ஒருமித்த குரலில் பேச விக்கினேஸ்வரன், தமிழரசுக் கட்சி, சம்மந்தன் ஆகியோருடன் பேசி அவர்களையும் இணைத்து செயற்பட முயற்சிகளை நாங்கள் எடுப்போம் என ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் இணைத் தலைவரும், ஊடகப்பேச்சாளருமான சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம் பெற்ற கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் உயர்மட்டக் குழுவான நிறைவேற்றுக் குழு கூடி பல முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ளது. இந்தக் கட்சிக்கான யாப்பு தயாரிக்கப்பட்டு இன்று இறுதி வடிவம் பெற்றுள்ளது. ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் உள்ள 5 கட்சிகளும் யாப்பை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இந்த யாப்பு அடுத்த சில தினங்களில் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

அதேபோல் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் பதவி நிலைகளுக்கும் நபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இணைத் தலைவர்களை கொண்ட கட்சியாக இது தொடர்ந்து செயற்படும். தற்போது 5 கட்சிகள் இதில் உள்ளன. அவர்கள் 5 பேரும் இணைத் தலைவர்களாக செயற்படுவர்.

அதேபோல் கட்சியின் செயலாளராக ஏற்கனவே ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் உடைய செயலாளராக இருந்த புளொட் அமைப்பைச் சேர்ந்த ஆர் ஆர் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டை மிக இறுக்கமாக எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கு இவர்கள் இணைந்து செயற்படுவார்கள் என எதிர் பார்க்கின்றோம். தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளோம்.

ரணில் விக்கிரமசிங்க அவர்கள் டில்லிக்கு போவது பற்றியும், தமிழ் தரப்பில் இது தொடர்பாக செய்ய வேண்டியவை என்ன எனவும் கதைத்துள்ளோம். இது தொடர்பில் விரைவில் இந்தியாவிற்கு கடிதங்களை அனுப்பவுள்ளோம். எதிர்காலத்தில் தமிழ் மக்களது பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகள் மற்றும் நடக்க கூடிய விடயங்கள் தொடர்பிலும் முக்கியத்துவம் கொடுத்து பேசினோம்.

இவற்றுக்கு அப்பால், அரசாங்கத்துடன் எதிர்காலத்தில் பேசுகின்ற போது ஒருமித்த குரலில் பேச வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைய ஜன நாயக தமிழ் தேசியக் கூட்டணியாகிய நாங்கள் அந்த விடயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து ஒருமித்த குரலில் பேச விக்கினேஸ்வரன், தமிழரசுக் கட்சியினுடைய சம்பந்தன் ஆகியோருடன் பேசி இணைந்து செயற்படுவதற்கான முயற்சிகளை நாங்கள் எடுப்போம். அவர்கள் ஒத்துழைக்காவிட்டாலும் கூட அந்த முயற்சிகளை நாங்கள் எடுப்பதாக தீர்மானித்துள்ளோம்.

ஒருமித்த குரலில் பேசுவது தான் முக்கிய தேவையாகவுள்ளது. தனித்தரப்பாக பேசும் போது ஒருமித்த கோரிக்கையை பலவீனப்படுத்தும். கடந்த காலத்தில் நாங்கள் வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் தமிழசுக் கட்சி நிராகரித்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்யாது, யாப்பை உருவாக்காது இருந்தது. இன்று அனைத்தையும் முறியடித்து தேவையான அனைத்து பொறிமுறைகளையும் நிறை வேற்றியுள்ளோம். அடுத்து வரும் காலங்களில் ஒவ்வொரு பிரச்சினைக்குமான குழுக்களை நிறுவி அதற்கான செயலாளர்களை நியமித்து முன்னெடுத்து செல்லவுள்ளோம்.

இந்தக் கூட்டம் வரலாற்றில் முக்கிய கூட்டம். முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்ட நாள். எதிர் காலத்தில் எமது யாப்பு கொள்கைகளை ஏற்று நடக்கும் கட்சிகள் அனைத்தும் எம்மோடு இணைய முடியும். அவர்கள் சமத்துவமாக நடத்தப்படுவார்கள் என சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார். (4-7-250)

# கிழக்கில் பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் கிளிநொச்சியில் கைது

(கிளிநொச்சி)

மட்டக்களப்பு திருகோணமலை கல்முனை உட்பட கிழக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களில் மோட்டார் சைக்கிள், மற்றும் வீடு உடைப்பு போன்ற 10 திருட்டு சம்பவங்களின் பிரதான சந்தேக நபர் ஒருவர் கிளிநொச்சியில் வைத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் இருந்து திருடப்பட்ட தங்க ஆபரணங்கள் கையடக்கத் தொலைபேசிகள் மடிக்கணிணி, மோட்டார் சைக்கிள் என்பன மீட்டுள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக மட்டக்களப்பில் மோட்டர் சைக்கிள் மற்றும் வீடு உடைத்து திருடப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்ட நிலையில் பிரதான சந்தேகநபரை அடையாளம் கண்டு கொண்டனர்.

இதனையடுத்து சந்தேகநபர் மறைந்திருந்த இடம் தொடர்பாக கிடைத்த தகவலின் பிரகாரம் மட்டு. தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கமைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவினரே குறித்த கைதை முன்னெடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டவரிடம் மேற்கொண்ட விசாரணையில் திருகோணமலை நிலாவெளியை சேர்ந்த 29 வயதுடைய இவர் கிளிநொச்சியில் திருமணம் முடித்து வாழ்ந்து வருவதாகவும் திருகோணமலை, கல்முனையில் மட்டக்களப்பில் பல திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டவர் என்றும் தெரியவந்துள்ளது. (4-7)

## மீண்டும்...

தேர்தல்கள் ஆணைக்குழு பலமுறை அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்த போதும் பொருளாதார நெருக்கடி காரணமாக நிதியினை வழுங்கமுடியாதென திறைசேரி செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்திருந்ததாகவும் நிமல் ஜி புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாகவே உள்ளூராட்சி மன்ற தேர்தல் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வேட்புமனுக்களை இரத்துச் செய்யும் யோசனை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இதற்கு பதில் வழங்கிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு விசேட சட்டமொன்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

குறிப்பாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வெறும் பிரேரணையால் வேட்புமனுக்களை இரத்துச் செய்யமுடியாது என்றும் புஞ்சிஹேவா மேலும் தெரிவித்தார்.

அத்துடன் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான பெரும்பாலான தபால் மூல வாக்குகள் அச்சிடப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதாகவும் அவை தற்போது அரச அச்சகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (4-7)

## பாலத்துக்கு...

துறை பிரதான வீதியில் வல்லைப்பகுதியில் அமைந்துள்ள பாலத்தில் ஏற்பட்ட வழுக்கல் நிலை காரணமாக அவ்வீதியில் பயணித்த வாகனம் ஒன்று பாலத்துக்கு வெளியே பாய்ந்துள்ளது. இப்பகுதி மழைக்காலங்களில் அதீத வழுக்கல் நிலையுடன் காணப்படுகின்றமையினால் அதிக விபத்துக்கள் இடம் பெறுகின்ற பிர்தேசமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.எனவே இவ் வீதியூடாக பயணிக்கும் வாகன சாரதிகள் அவதானமாக செயற்படுமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.(4-7.60)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 4 பரப்பு காணி விற்பனைக்கு

- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ஒரு பரப்பின் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மட்டும்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி

(16010)

076 436 5814
076 739 0413

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16010)

076 733 6047
076 755 8606

## பாராட்டுக்குரிய கரவெட்டி பிரதேச சபை செயலர்

### திரு.கணேசன் கம்ஸநாதன்

- கரவெட்டி பிரதேச சபைக்கு உட்பட்ட வியாபார உரிமம் பெறாத R.O என அழைக்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விற்பனை நிலையங்கள் மீது மேற்படி செயலர் அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தமையானது குடாநாட்டு மற்றைய பிரதேச சபைகளுக்கு முன்னுதாரணமான செயற்பாடாக அமைவதால் இது பாராட்டுக்குரியது.
- இது போன்று வியாபார உரிமம் பெறாத தனியார் கல்வி நிறுவனங்களின் மீதும் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படின் கௌரவ யாழ். மாவட்ட அரச அதிபரின் ஜுலை 1 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தனியார் கல்வி நிறுவன செயற்பாடுகள் வெற்றிகரமாக அமையும் என நம்பப்படுகின்றது.

ப.ஈஸ்வரநாதன்
Raveens E.M.C கரவெட்டி,
நிர்வாகி
கரவெட்டி பிரதேச தனியார் கல்வி நிலைய ஒன்றிய செயலாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருந்தூர், திரியாயவில் தமிழர்களை குடியேற்ற முடியாது

## அது பௌத்தர்களின் இடம் என்கிறார் எல்லாவல மேதானந்த தேரர்



(கொழும்பு)

குருந்தூர், திரியாய ஆகிய விகாரைக்ளுக்குச் சொந்தமான காணிகளில் பௌத்தர்கள் அல்லாதவர்களை குடியேற்றுவதற்கு இடமளிக்க முடியாது என்று தொல்பொருள் ஆய்வாளர் கலாநிதி எல்லாவல மேதானந்த தேரர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் போன்றே வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல்வாதிகள், அம் மக்களை மீண்டும் தவறான பாதைக்கு கொண்டு செல்கின்றனர்.

புராதன பௌத்த விகாரைகளுக்குச் சொந்தமான காணிகளில் மக்களை குடியேற்றுவதற்காக அவர்கள் தவறான நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில் அதற்கு இணக்கம் வெளியிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெரும் பாவத்தை செய்யக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

குருந்தூர் மலை மற்றும் திரியாய ஆகிய பகுதிகளில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை தொல் பொருளியல் திணைக்களம் கையகப்படுத்தி வைத்திருப்பதை தவிர்த்து அதற்கு உரித்துடைய தமிழ் மக்களிடத்தில் கையளிக்க வேண்டும் என ஜனாதிபதி கடந்த 8ஆம் திகதி உத்தரவிட்டிருந்தார்.

இதனை தொடர்ந்து தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அனுர மனதுங்க, பதவி விலகியுள்ள நிலையில், எல்லாவல மேதானந்த தேரர் குறித்த விகாரைகளுக்குச் சொந்தமான காணிகளை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டாம் என்று வலியுறுத்தி கடிதம் அனுப்பியுள்ளார்.

இதனையடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் குறித்த காணிகளை வழங்கப் போவதில்லை என்றும் காணிகள் பற்றிய விடயத்தினை முழுமையாக ஆராய்வதற்கு குழுவொன்றை நியமிக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க மறு கடிதம் அனுப்பியியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கலப்பட மிளகாய் தூள் விற்பனை அதிகரிப்பு

### பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

சந்தையில் கலப்படம் செய்யப்பட்ட மிளகாய்த் தூளின் விற்பனை அதிகரித்துள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கோதுமை மா, உப்புத் தூள் மற்றும் வர்ணத் தூள்கள் என்பன மிளகாய் தூளுடன் கலக்கப்படும் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அந்த சங்கத்தின் பொருளாளர் ரொஷான் குமார தெரிவித்தார்.

சந்தையில் ஒரு கிலோ கிராம் மிளகாய்த் தூள் 1,600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இந்தநிலையில், 40 சதவீதம் வரையில் கலப்படம் செய்யப்பட்ட மிளகாய்த் தூள் சந்தையில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சந்தையில் மிளகாய்த் தூளின் விலை அதிகரித்துள்ளமையினால், அதிக இலாபத்தை ஈட்டுவதற்காக வர்த்தகர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனைகளுக்கு அமைய வர்ணம் சேர்க்கப்பட்ட கோதுமை மா, மிளகாய்த் தூளுடன் கலக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் பொருளாளர் ரொஷான் குமார தெரிவித்துள்ளார். (நி)

# உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி நகலை கூட்டமைப்பிடம் வழங்குவோம்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறித்த இறுதி நகல் வடிவை அரசாங்கம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் வழங்கும் என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த நகலை வெளிநாட்டு இராஜதந்திரிகளிடமும் சமர்ப்பித்த பின்னரே அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்போம் என விஜேதாச ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறித்த இறுதி நகல் அடுத்த மாத இறுதிக்குள் தயாராகிவிடும்.

பாராளுமன்றம் அனுமதியளித்ததும் டிசெம்பர் மாதம் முதல் அதற்காக ஆணைக்குழு செயற்பட ஆரம்பிக்கும் எனவும் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 53 ஆவது அமர்வு இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த நடவடிக்கைகள் துரிதமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


இரண்டாம் ஆண்டு
நினைவஞ்சலி

அன்னை மடியில் 24 . 02 . 1973
ஆண்டவன் பாதத்தில் 11 . 07 . 2021
அமரர் சின்னையா மணிவண்ணன்
திதி: பூர்வபக்க துதியை
அன்போடு பல கதை சொல்லி
பாசத்தோடு எமை பார்த்து இன்று எங்களை கண்ணீரில்
தவிக்கவிட்டு சென்று ஈராண்டு ஆகிவிட்டதே
உம்மைப்போல் இனி நாம் யாரைப்பார்ப்போம்
எம் குலசாமியே! காலங்கள் பல கடந்தாலும்
கனவுகள் கலைந்தாலும்
நாம் உம் மீது வைத்த பாசம் பசுமரத்தாணி போன்றது
என்றும் ஆறாத காயங்களோடு
உங்களது அழகான நினைவுகளுடன் நாம்...
தம்பலடி பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.


# சர்வதேச பயணத்தடை இராணுவ வீரர்களின் மனதைப் பாதிக்கும்

## இது தொடர்பில் வெளியுறவு அமைச்சகம் தலையிட வேண்டும்

### சரத் வீரசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவ வீரர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய சர்வதேச பயணத்தடைகள் விடயத்தில் வெளியுறவு அமைச்சகம் தலையிட வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக்குழு வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் நடந்த தேசிய பாதுகாப்புத்துறைசார் மேற்பார்வைக் கூட்டத்தில் இந்த பயணத்தடைகள் இராணுவ வீரர்களின் மன உறுதியை பாதிக்கும் என குழுவின் தலைவரான சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தூதுவர்கள் மூலமாகவும், உயர் மட்டக் கலந்துரையாடல்கள் மூலமாகவும் வெளியுறவு அமைச்சகம் இந்த விவகாரத்தில் இலங்கையின் நிலைப்பாட்டை அந்தந்த அரசாங்கங்களுக்குத் தொடர்ந்து தெரிவித்து வருவதாக இதன்போது இலங்கையின் வெளியுறவு செயலாளர் விளக்கியுள்ளார்.

இது தொடர்பான தீர்மானங்களை மறுபரிசீலனை செய்யுமாறு அந்தந்த அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் வெளிவிவகார செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இலங்கை இராணுவத்தின் தற்போதைய முயற்சிகள் மற்றும் சில பாதுகாப்பு இராணுவ முகாம்களை திரும்பப்பெறுதல் மற்றும் தேசிய பாதுகாப்பில் அதன் தாக்கம் குறித்தும் குழு, இதன்போது கேள்வி எழுப்பியுள்ளது.

இந்த நிலையில், இராணுவத்தை திரும்பப்பெறுவது தேசிய பாதுகாப்பு, பிராந்திய பாதுகாப்பு மற்றும் புனித இடங்களின் பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தாது என அமர்வின் போது பாதுகாப்பு செயலாளர் உறுதியளித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண சிநேகபூர்வ விளையாட்டு

# துடுப்பாட்டத்தில் சட்டத்தரணிகள் அணி சம்பியன் | வலைப்பந்தாட்டத்தில் மருத்துவர்கள் அணி சம்பியன்




வடக்கு மாகாணத்தில் மருத்துவர்கள் மற்றும் சட்டத்தரணிகள் இடையே சிநேகபூர்வ துடுப்பாட்டப் போட்டி, வலைப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது. துடுப்பாட்டப் போட்டியில் சட்டத்தரணிகள் அணியும் வலைப்பந்தாட்டப் போட்டியில் மருத்துவர்கள் அணியும் வெற்றியீட்டியது.

இரண்டாவது வருடமாக நடத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டி நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

35 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்டப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மருத்துவர்கள் அணி 34.4 ஓவரில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களை எடுத்தனர்.

227 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சட்டத் தரணிகள் அணி 22.3 ஓவரில் மூன்று விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

மாலை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற வலைப்பந்தாட்ட போட்டியில் மருத்துவர்கள் அணி 34 புள்ளிகளையும் சட்டத்தரணிகள் அணி 8 புள்ளிகளையும் பெற்றதன் அடிப்படையில் மருத்துவர்கள் அணி வெற்றி பெற்றது.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறித்த போட்டி யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தினால் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டது. போட்டியில் விருந்தினர்களாக நீதிபதிகள், மருத்துவ நிபுணர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க-6-33)



# இந்திய டெஸ்ட் தொடர் கப்டன் பதவிக்கு போட்டி

இந்திய டெஸ்ட் தொடரில் அடுத்த கப்டன் பதவிக்கு கடும் போட்டி நிலவி வருகிறது.

சமீபத்தில் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி நடைபெற்றது. இப் போட்டியில் அவுஸ்திரேலியா அணியுடன் மோதிய இந்திய அணி படுதோல்வி அடைந்தது.

இந்திய அணி தோல்வியை குறித்து பலர் சமூக வலைத்தளங்களில் விமர்சனம் செய்து வருகின்றனர். விராட் கோலி தலைமையிலான இந்திய அணியே பரவாயில்லை போல, ஆனால் ரோஹித் சர்மா தலைமையிலான அணி சொதப்பி வருகிறது என்று ரசிகர்கள் தெரிவித்து வருகின்றனர்.

தற்போது ரோஹித் சர்மா வெஸ்ட் இண்டீஸ் தொடரில் தனது கப்டன் பொறுப்பிலிருந்து விலகப்போவதாக தகவல் வெளியானது.

இதனையடுத்து, டெஸ்ட் போட்டியில் இந்திய அணிக்கு யார் கப்டனாகப் போவது என்ற கேள்வி எழுந்துள்ளது.

கப்டன் பட்டியலில் முதலிடத்தில் ரிஷப் பந்தும் 2வது இடத்தில் கே எல் ராகுல், 3 ஆவது இடத்தில் ரகானே, 4 ஆவது இடத்தில் அஸ்வின் இடம்பெற்றுள்ளனர். இவர்களில் ஒருவருக்கு கப்டன் பொறுப்பு அளிக்க வேண்டும் என்று ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். ஆனால், யார் கப்டன் என்பதை பி.சி.சி.ஐ முடிவெடுக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2856

### மிதுன்

ஆயிரம் மடங்கு அன்பை உள்ளே வைத்துக் கொண்டு எதிரியைப்போல் தெரியும் ஒரே உறவு "அப்பா" மட்டுமே...



இருக்கும் வரை அவர் அருமை பல பேருக்குத் தெரிவதில்லை.

### ஹட்சனா

என்னங்க... என்னங்க... சீக்கிரம் எழும்புங்க...



தவளை மாதிரி குறட்டை விடாதீங்கன்னு சொன்னனே கேட்டீங்களா...

### சஞ்சீவ்

காலையில இருந்து மதியம் வரை சாப்பாடு சாப்பிடாம இருந்தாலே பசிக்குது!



நைட்டு பூரா சாப்பிடாம தூங்குறோமே அப்போ எப்படி பசிக்காம இருக்குது...

### றொசா

குடிய மறக்கிறதுக்கு பெரிய மாத்திரை கொடுத்தீங்க சரி... இது என்ன டாக்டர் சின்ன மாத்திரை



இது சைடிஷ்ச மறக்கிறதுக்கு

### கனுசன்

நாம் சரியாக பேசினாலும் தவறாக புரிந்து கொள்ளும் உறவுகளுக்கு மத்தியில்...

Google

நாம் தவறாக பேசினாலும் சரியாக புரிந்து கொள்ளும் ஒரே ஜீவன் Google தான்

### இனியா

எது இன்று உன்னுடையதோ அது நாளை வேறொருவருடையதாகிறது...



அப்புறம் ஏன் ஆண்டவா நான் வாங்கிய கடன் மட்டும் என்னுடையதாகவே இருக்குது...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வருடம் ஒன்றிற்கு 3 ஆயிரம் குழந்தைகள்

## இதயம் தொடர்பான பிரச்சினைகளுடன் பிறக்கின்றன

### குழந்தை இருதய நோய் நிபுணர் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**எமது நாட்டில் வருடம் ஒன்றிற்கு 3000 குழந்தைகள் இதயம் தொடர்பான பிரச்சினைகளுடன் பிறக்கின்றன. இவர்களில் 1500 குழந்தைகளுக்கு மட்டுமே ஒரு வருடத்திற்குள் சிகிச்சை அளிக்க எம்மால் முடிகிறது.**

எஞ்சிய 1500 குழந்தைகளுக்கான சிகிச்சைக்காக அவர்கள் காத்திருக்க வேண்டிய நிலை தொடர்கின்றதுஎன கொழும்பு லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் குழந்தை இருதய நோய் நிபுணரும் ஆலோசகருமான மருத்துவர் துமிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு லங்கா வைத்திய சாலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிறவியிலேயே இதய பிரச்சினைகளைக் கொண்ட பிள்ளைகளின் உயிர் காக்கும் பணியில் ரோட்டரி கழகமும் இந்தியாவும் பெரும் உதவிகளை வழங்கியுள்ளன.

அந்த வகையில் இதய பிரச்சினை உள்ள குழந்தைகளுக்கு எம்மால் சிகிச்சை அளிக்கவும் அவர்களுக்கு இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளவும் முடியுமானதாக உள்ளது என தெரிவித்தார். (நி)

# எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வருடத்திற்குள் 620 புதிய நோயாளர்கள் மற்றும் 81 இறப்புகள் பதிவாகியுள்ளதாக தேசிய சுகாதார சேவை திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு பதிவான மொத்த ஒட்டுமொத்த தொற்றுக்களுடன் ஒப்பிடும்போது, இந்த வருட முதல் காலாண்டில் (ஜனவரி-மார்ச்) 13 வீத அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

மேலும் எண்ணிக்கையில் எச்.ஐ.வி. எயிட்ஸ் தொற்றுக்கள் 4,556 இலிருந்து 5,176 ஆக அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில், 165 புதிய நோயாளர்கள் மற்றும் 15 இறப்புகள் பதிவாகியுள்ளன. (நி)

# வெளிவிவகார அமைச்சர் சீனா பயணம்

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்புச் செயன்முறைக்கு அவசியமான ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது குறித்து, விசேட பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்காக அடுத்த வாரம் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சீனா செல்லவுள்ளார்.

சீனாவில் நடைபெறவுள்ள பொருளாதார கூட்டமொன்றில் பங்கேற்குமாறு தமக்கு சீன அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரம் அடுத்த வாரம் அங்கு செல்லவுள்ளதாக அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (நி)

# பொருளாதாரத்தை சீரழிக்கும் கருத்துக்களை வெளியிட வேண்டாம்

## ஷெகான் கோரிக்கை

(கொழும்பு)

பணவீக்கத்தை கட்டுப்படுத்த நிதி அமைச்சும் மத்திய வங்கியும் பல்வேறு உத்திகளை மேற்கொண்டு வருவதாக பதில் நிதியமைச்சர் ஷெகான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.



அதன்படி எதிர்காலத்தில் வட்டி விகிதங்கள் குறையும் என்றும் சாதகமான முடிவுகளை எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆகவே அபிவிருத்தியடைந்து வரும் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச நம்பிக்கையை உடைக்கும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதை தவிர்க்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)

# டெங்கு பரவும் காணிகள் சுவீகரிக்கப்படும்

## அரசாங்கம் அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

டெங்கு நோய் பரவும் வகையில், பாதுகாப்பற்ற வகையில் காணப்படுகின்ற காணிகளை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்தவகையில் பாதுகாப்பற்ற காணிகள் வைத்திய அதிகாரிகளால் அடையாளம் காணப்பட்டால் அந்த காணிகள் சுவீகரிக்கப்படும் என நிர்வாக பொது சுகாதார பரிசோதகர் அஜித் விதானகே தெரிவித்துள்ளார். (நி)

# முட்டை, மாவின் விலை குறைந்தால் பேக்கரி உணவுகளின் விலை குறையும்

## அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

முட்டை மற்றும் கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டால் பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை குறைக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம் முட்டை ஒன்றின் விலையை 35 ரூபாயாகவும் கோதுமை மாவின் விலையில் 180 முதல் 170 ரூபாய் வரை குறைக்க வேண்டும் என அச் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

அத்தோடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள கோதுமை மா இறக்குமதியை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அச் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார். (நி)

# இராசிபலன்

19.06.2023
ஆனி 04, திங்கட்கிழமை
பிரதமை முற்பகல் 11.25 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 8.23 மணிவரை

சுபநேரம்-11.54-1.24 மணிவரை
இராகுகாலம்-7.24-8.54 மணிவரை
புதூர் நாக தம்பிரான் பொங்கல்
நயினை நாகபூசணி கொடியேற்றம்

சந்திராஷ்டமம்-
அனுசம், கேட்டை

**வளவன்**

**மேஷம்** — வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**கடகம்** — அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும், பயணங்கள் கைகூடும்.

**துலாம்** — விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மகரம்** — கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**ரிஷபம்** — வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** — அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், உன்னதமான வழிக்கு அடித்தளம் அமைக்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**விருச்சிகம்** — பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், விரயங்கள் மேலோங்கும் நாள்.

**கும்பம்** — பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** — எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி** — திறமைகள் வெளிப்படும் நாள், நிலையான வருமானத்திற்கு வழியமைக்கும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு** — பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வராத உறவினர்கள் திடீரென உங்கள் வீட்டுக்கு வரலாம், ஆனந்தமான நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** — மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

மகிழ்ச்சி ஒரு மனிதனின் பலத்தின் பாதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருக்கு வலைத் தொழிலால் பாதிக்கப்படும் கடற்றொழிலாளர்கள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் இடம் பெறும் சுருக்கு வலை தொழிலால் வடமராட்சியிலிருந்து காங்கேசன் துறை கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் இதனால் கடற்றொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும் வடமாகாண மீனவர் அமைப்பு பிரதிநிதியும் முன்னாள் யாழ்.மாவட்ட சம்மேளன தலைவருமான அ.அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.வடமராட்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

பருத்தித்துறை பிரதேசத்தில் கடந்த வாரத்திலே மீண்டும் சுருக்குவலை தொழில் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டதனால் இந்த பிரதேச தொழிலாளர்கள் மிகமிக வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சட்டவிரோதமாக சுருக்கு வலை தொழிலில் ஈடுபடும்போது ஆயிரக்கணக்கான மீன்களை சுருக்குவலை மூலம் பிடிப்பதனால் அந்த பகுதியிலே இருந்து வருகின்ற மீன்களின் வருகை குறைவதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (நி-6)



யாழ். பல்கலைக்கழக, கலைப் பீடத்தைச் சேர்ந்த பொருளியல் துறையின் இளம்பொருளியலாளர் மன்றத்தினால், கடந்த புதன் கிழமை உலகக் குருதிக்கொடைத் தினத்தையொட்டி குருதிக்கொடை நிகழ்வில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

(படம்:-சிவசாந்தன்)

# மதுபோதையில் தகராறு; யாழில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் உள்ள பழக்கடையில் மது போதையில் தகராறில் ஈடுபட்ட இருவரை யாழ்ப்பாணம் போக்குவரத்து பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு அங்கிருந்தவர்களினால் வழங்கப்பட்ட தகவலினை அடுத்து இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றது.

,கைது செய்ய முற்பட்ட போது மதுபோதையில் இருந்த அந்த இரு நபர்களும் தப்பியோட முற்பட்டதுடன், பொலிஸாருடன் தகராறில் ஈடுபட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6)

# இன்று நயினை நாக பூசணிக்கு கொடி



அலைகடல் தாலாட்டும் நயினையிலே
அலைகடல் நடுவே வீற்றிருந்து- எல்லையில்லா
அருள் பாலிக்கும் நாகபூசணித் தாயே
அடியவர்கள் குறைகள் தன்னை-தீர்த்தருளும்
அமுத சுரபித்தாயே.
அகந்தையை அழித்து நல்
ஆற்றலைக் கொடுக்கும் மகா சக்தியே
நாட்டில் பொருளாதார நெருக்கடி
உச்சமடைந்து விட்டது தாயே!
மக்களுக்கு பல வழிகளில்
துன்பங்கள் துயரங்கள் தாயே!
எம்மிடத்தில் உள்ள குறைதனை
உம்மிடம் கூறாமல்-இனி
யாரிடம் எடுத்துரைப்பது தாயே!
கொடியேற்றி எம்மக்களுக்கு
நல் விடியலைத் தா தாயே!

நயினை விசு-இராசநாயகம்

# ஆனி மாத இராசி பலன்கள் 16.06.2023-16.07.2023

## சிம்மம்

**சகல கலைகளிலும் வல்லவர்களாக விளங்கும் சிம்ம இராசி வாசகர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாத தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியை குரு பகவான் பார்க்கிறார். "குரு பார்க்க கோடி நன்மை" என்பதற்கு ஏற்ப நல்ல சந்தர்ப்பங்கள் நாடிவரும் மாதம் இது. தொல்லை தந்தவர்கள் விலகுவர். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். கண்டகச்சனியின் ஆதிக்கம் இருப்பதால் இடையிடையே ஆரோக்கியத் தொல்லை ஏற்பட்டு நிவர்த்தியாகும்.

**மிதுன - புதன்**

ஆனி 3 ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு லாப ஸ்தானத்திற்கு அதிபதியான புதன், லாப ஸ்தானத்திலேயே சஞ்சரிப்பது யோகம் தான். அதுமட்டுமல்லாமல் சூரியனோடு புதன் இணைந்து "புத ஆதித்ய யோக"த்தையும் உருவாக்குகிறார், எனவே படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் பலன் கிடைக்கும். அரசாங்க உதவியை நாடுபவர்களுக்கு அது கைகூடும். வெளிநாட்டில் இருந்து உத்தியோகம் சம்பந்தமாக அழைப்புகள் வரலாம். ஒரு சிலருக்கு இருக்கும் இடத்திலேயே பணி உயர்வும் சம்பள உயர்வும் ஏற்படும். சேமிப்பு உயர எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**சிம்ம - செவ்வாய்**

ஆனி 17 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அப்பொழுது குருவின் பார்வை செவ்வாய் மீது பதிகிறது. எனவே "குரு மங்கல யோகம்" ஏற்படுகிறது. சுபச்செலவு அதிகரிக்கும். எதிர்பாராத விதத்தில் உதவிகள் கிடைத்து தொழில் வளர்ச்சி கூடும். விலை உயர்ந்த பொருட்களின் சேர்க்கையும் உண்டு. குருவின் பார்வை பதிந்த செவ்வாய், சனியைப் பார்ப்பதால் மருத்துவம் சார்ந்த பணிகளில் இருப்பவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு.

**சிம்ம - சுக்கிரன்**

ஆனி 18 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கல் யோக"த்தை உருவாக்குகிறார். மேலும் குருவின் பார்வை, செவ்வாய் மற்றும் சுக்கிரன் மீது பதிவதால்ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தென்படும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு சில முக்கியப் பொறுப்பு கிடைக்கும். மேல்மட்டத் தலைவர் கள் மிக நெருக்கமாக இருப்பார்கள். அவர்களின் உதவியோடு முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடக - புதன்**

ஆனி 19 ஆம் திகதி, கடக இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், விரயஸ்தானத்திற்கு வரும்போது கட்டுக்கடங்காத வகையில் செலவு ஏற்படும். பெற்றோரின் மணிவிழா, பிள்ளைகளின் மணவிழா, இடம், பூமி வாங்கும் அமைப்பு, வாகன மாற்றம் போன்றவற்றுக்காக செலவிட்டு, வீண்விரயத்தை சுபவிரயமாக மாற்றிக் கொள்வது நல்லது. ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலம் ஆரோக்கியத்தை சீராக்கிக்கொள்ள இயலும்.. பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மேலிடத்து ஆதரவோடு மிகச்சிறந்த பொறுப்புகள் வரலாம். வியாபாரம், தொழில் செய்பவர்கள் புதிய கிளை திறக்கும் சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அலுவலகப் பொறுப்புகள் கூடும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். மாணவ- மாணவிகளுக்கு வெற்றி வாகை சூடும் அமைப்பு உண்டாகும். பெண்களுக்கு மனநிறைவும் மகிழ்ச்சியும் ஏற்படும் நேரம் இது. பணிபுரியும் பெண்களுக்கு பணிச் சுமை குறையும். எதிர்பார்த்த ஊதிய உயர்வு வந்து சேரும்.

## கன்னி

**மற்றவர்களின் மனதைப் புரிந்து செயற்படும் கன்னி இராசி நேயர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் உச்சம்பெற்ற சந்திரனோடு இணைந்து பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோர்கம்தான். ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணைபுரியும் விதத்தில் நல்ல வாய்ப்புகள் வரப்போகிறது. ஊர்மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு அது கைகூடும். குருவின் பார்வை தன ஸ்தானத்தில் பதிவதால் பணவரவு சரளமாக இருக்கும்.

**மிதுன - புதன்**

ஆனி மாதம் 3 ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். இது அவருக்கு சொந்த வீடாகும். உங்கள் இராசிநாதன் புதன் என்பதால் இக்காலம் ஒரு இனிய காலமாக அமையும். எதிர்காலத்தை சிறப்பாக்கும் முக்கியப் புள்ளிகளை இப்பொழுது சந்திக்க நேரிடும். அஷ்டமத்து குருவால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயம் திருப்தி தரும். உத்தியோகத்தில் உங்கள் செயற்பாடுகளையும் திறமைகளையும் பார்த்து மேலதிகாரிகள் பாராட்டுவர். சூரியனோடு புதன் இண்ணவதால் "புத ஆதித்ய யோகம்" உருவாகின்றது. எனவே அரசு சார்ந்த விடயங்களில் அனுகூலம் கிடைக்கும்.

**சிம்ம - செவ்வாய்**

ஆனி 17 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்திற்கு செவ்வாய் வருவது யோகம்தான். 8 இற்கு அதிபதி 12 இல் வரும்பொழுது எண்ணற்ற நற்பலன்கள் கிடைக்கும். திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம். திடீர் முன்னேற்றம் உண்டு. ஒரு சிலருக்கு வீடு, இடம் வாங்கும் அமைப்பு ஏற்படும். சிம்மத்தில் இருக்கும் செவ்வாயை குரு பார்ப்பதால் கெடுபலன்கள் குறையும்.

**சிம்ம - சுக்கிரன்**

ஆனி 18 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் வருகிறார். அவர் அங்குள்ள செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கல யோக" த்தை உருவாக்குகிறார். மேலும் குருவின் பார்வை பதிந்த செவ்வாயின் பார்வை, சனி மீது விழுகின்றது. எனவே தொழில் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் வெற்றி நிச்சயம். நிர்வாகத் திறமைக்கு பாராட்டுக்களும் கிடைக்கும். தன வரவில் இருந்த தடைகள் அகலும். வியாபார விருத்திக்கு புதிய முதலீடுகள் வந்து சேரும். கடன் பிரச்சினைகள் படிப்படியாகத் தீர்ந்து மன நிம்மதி அடைவீர்கள்.

**கடக - புதன்**

ஆனி 19 ஆம் திகதி, கடக இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிநாதன் லாப ஸ்தானத்திற்கு வரும்போது, செய்யும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வெளிநாடு தொடர்பான சிந்தனைகள் அதிகரிக்கும். கடல் வணிகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும். ஆதாயம் தரும் தகவல்களை அதிகமாக நண்பர்கள் கொண்டு வந்து சேர்ப்பர். புதிய வாகனங்களை வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும். உத்தியோகத்தில் உங்கள் அறிவுத்திறமையை கண்டு அதிகாரிகள் வியப்பர். தொழில் வெற்றி நடை போடும். இல்லத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய முயற்சிகள் பலன் தரும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு தொழிலை அபிவிரு த்தி செய்ய உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவாக இருப்பர். வெளிநாடு சென்று பணிபுரிய நினைப்பவர்களுக்கு அந்த முயற்சி கைகூடும். கலைஞர்களுக்கு சகக் கலைஞர்களின் அறிமுகத்தால் ஒப்பந்தங்கள் வந்து சேரும். மாணவ-மாணவிகளுக்கு உயர்கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி தரும். பெண்களுக்கு ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. நல்ல வரன்கள் கைகூடும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# சூழலியல் மாற்றத்திற்கு ஏற்ப உடல் உஷ்ணத்தை தணிக்கும் மூலிகை உணவுகளும் உப உணவுகளும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சூழலியல் மாறுபாட்டால் பருவகாலத்தின் தட்ப வெப்ப நிலைமைகளில் எவ்வாறான உணவு முறைகள், பழக்கவழக்கங்களை மேற்கொள்ள வேண்டும், என்பதை சித்தமருத்துவம் எடுத்தியம்புகின்றது.

பின் பனிக்காலமாகிய பங்குனி மாதத்தில் வெப்பத்தின் தாக்கம் பூமியில் அதிகமடைந்து காணப்படுவது போல சித்திரை, வைகாசி மாதங்களிலும் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக காணப்படும்.

இச் சூழலியல் மாற்றத்தால் பற்பல தோல்வியாதிகளும் பித்தம் சம்பந்தமான நோய்களும் அதிகரிப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

எனவே, நாம் இக் காலத்தில் ஏற்படும் நோய் நிலைகளிலிருந்து விடுபட எமது உணவு முறைகள், பழக்கவழக்கங்களை மாற்றியமைத்து கொள்ள வேண்டும்.

முக்கியமாக இளநீர், பதநீர், கற்றாழை யூஸ், கரும்புச்சாறு, நெல்லிக்கனி, எலுமிச்சம்பழச்சாறு, நாரத்தம்பழச்சாறு, கரட் சாறு, வெள்ளரிப்பிஞ்சு, தர்பூசணி, நன்னாரி வேர், வெட்டி வேர் அறுகம்புல் சாறு, சீரகநீர், இலுப்பம்பூ, வேப்பம் பூ, வில்வம்பூ, பழைய சாதமும் மோரும், கீரை வகைகள் ,(அறக்கீரை, சீதேவியார் செங்கழுநீர், மூக்கரட்டைக்கீரை, ஆரை கீரை), நெற்பொரி அவித்த நீர், வெந்ம் ஊறியநீர், விலிம்பிலிக்காய், தமரத்தங்காய், தாமரைக்கிழங்கு, செவ்வரத்தம்பூ, வில்வம் பழம், விளாம்பழம் போன்ற உணவுகள் முக்கிய இடம் வகிக்கின்றன.

### கற்றாழை யூஸ்

கற்றாழைச்சாறு உடலிற்கு குளிர்ச்சி மட்டுமில்லாது மலத்தை இளக்கி வெளியேற்றக் கூடியது. தோலை மிருதுவாக வைத்திருக்க கூட்டியது.


செய்முறை

கற்றாழை சோறு-700 கிராம் , தயிர்- 1 லீற்றர், தேசிப்பழச்சாறு - 60 மில்லி (2 பழம்), சீனி - 500 கிராம் உப்பு சிறிதளவு.

கற்றாழை மடலையும் கரை முட்களையும் சீவி அகற்றிய சோற்றை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி 7 தடவை நீரில் நன்றாக கழுவவும்

இவ்வாறு எடுத்த 700 கிராம் கற்றாழை சோற்றையும், 1 லீற்றர் தயிரையும், வடித்த எலுமிச்சம்பழ ரசத்ந்தயும், சீனியையும், உப்பையும் ஒரு பாத்திரத்தில் சேர்த்து கலக்கி, மிக்ஸியில் அடித்து கப்களில் ஊற்றி குடிக்கவும்.





### வெள்ளரி

வெள்ளரி பிஞ்சுகளை தினமும் சாப்பிடலாம். வெள்ளரி பிஞ்சுகளை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி தயிர்ப்பச்சடியில் சேர்த்தோ, மோரில் இட்டோ அருந்தலாம்.

வெள்ளரிக்காயை மிக்சியில் அடித்து மென்பான மாக அருந்திவர உடல் உஷ்ணத்தை நீக்கும் மலச்சிக்கலை நீக்கும். இதில் 96.3 வீதம் நீர்ச்சத்து உள்ளதால் வயிற்றெரிச்சலையும் குணமாக்கும்.

வெள்ளரிக்காயை தினமும் முகத்தில் பூசி வர வறட்சி நீங்கும்.

### வெள்ளரிப்பழ சர்பத்

வெள்ளரிப்பழ சாறு தேவையான அளவு சீனி எலுமிச்சம் பழச்சாறு

வெள்ளரிப்பழங்களை தோல் சீவி, பிசைந்து, விதை களை நீக்கி விட்டு சீனி சேர்த்து பாகுபதம் வரும் வரை அடுப்பேற்றி காய்ச்சி இறக்கவும் போத்தல் ஒன்றில் அடைக்கவும் இதிலிருந்து 3 தேக்கரண்டியுடன் 200 மில்லி . நீர் ஊற்றி கலந்து குடிக்க உடல் உஷ் ணம் குறைந்து பித்த நோய்கள் நீங்கும்

### தர்ப்பூசணி

உடலிற்கு குளிர்ச்சியை தரும், வெப்பகாலத்திற்கு உகந்த ஆரோக்கிய பழமும் பாணமுமாகும்.

### தாமரைக் கிழங்கு

சதைப்பிடிப்பான உடன் தாமரைக்கிழங்குகளைச் சேகரித்து கழுவி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி நிழலில் உலர்த்தி பொடித்து வைத்துக் கொண்டு இதில் 4-8 கிராம் அளவு எடுத்து 200 மில்லி வெந்நீரில் கரைத்து கஞ்சி தயாரித்து குடிக்க உடலிற்கு பலத்தையும் குளிர்ச்சியையும் கொடுக்கும்.

### வெந்தயமும் வெந்தயக் கீரையும்

வெந்தயக்கீரையை சமைத்துண்ண உடலிலுள்ள சொறி, சிரங்கு குணமாகி உடலிற்கு குளிர்ச்சியை கொடுக்கும். வெந்தயத்தை நீரில் இட்டு ஊறவைத்து நீரை வடித்து குடிக்க உடல் உஷ்ணம் தணியும்.

இவற்றைவிட ஆவாரம் பூக்களையும், பச்சைப்பயறு இரண்டையும் சேர்த்து அரைத்து உடலில் பூசி குளித்து வந்தாலும் தோல் நோய்களை தடுக்கும்.

ஆவாரம் பூக்களை சுத்தம் செய்து கழுவி துவரம் பருப்புடன் சேர்த்து சமைத்து சாப்பிட்டு வந்தாலும் உடல் குளிர்ச்சியடையும்.

வெப்பகாலத்தில் போதியளவு நீரை அடிக்கடி அருந்த வேண்டும். சிறு நன்னாரி வேர், வெட்டி வேர் இவற்றை கழுவி துண்டுகளாக நறுக்கி நீரில் ஊறவிட்டு அருந்திவர உடலிற்கு குளிர்ச்சியை கொடுக்கும். கொடிப்பசளி, குத்துப்பசளி, மூக்கரட்டை போன்ற கீரை வகைகளை தினமும் ஏதாவது ஒன்றை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

காலையில் கஞ்சி வகைகள் அருந்துவது சிறந்தது. இவற்றில் சாத்தாவாரி இலைச்சாறு, பொன்னாங்கானி இலைச்சாறு கலந்து இலைக்கஞ்சியாக உண்ணலாம்.

கரட்சாறு, அறுகம்புல் சாறு என்பன 15-30 மில்லி அளவு . வாரத்தில் 4 நாட்கள் அருந்தலாம்.

மேற்கூறிய பானங்கள், உணவுகள் என்பன எமது பிரதேசத்தில் கிடைக்க கூடியதும் பருவகாலத்திற்கு உகந்ததும் இலகுவில் தயாரிக்க கூடியதுமாகும்.

### நல்லெண்ணெய்

நல்லெண்ணெய் தேய்த்து குளித்து வர உடற் சூட்டினால் ஏற்படும் கண் வறட்சி, கண்ணில் நீர் வடிதல், கபால சூடு என்பன நீங்கும்.

கற்றாழை சாறுடன் நல்லெண்ணெய் கல்ந்து காய்ச்சி தலைக்கு தடவிவர உடல் சூடு தணிந்து, கண் சூடு, கண் எரிச்சல் , கண் சிவப்பு நீங்கும்.

மேலும் நல்லெண்ணெய் குளியலால் தோல் மிருதுவாகும். வெப்ப காலங்களில் ஏற்படும் தோல் வியாதிகள் நீங்கும்.

மேலும் குளியல் பொடியாக பச்சைப்பயறு, வெட்டிவேர், சந்தனக் கட்டை, ஆவாரம் பூக்கள், எலுமிச்சம் பழதோல் (உலர்ந்தது) போன்றவற்றை உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொண்டு சோப்பிற்கு பதிலாக, இளஞ்சூடான நீரில் குழைத்து பூசி 20 நிமிடங்களின் பின் குளிக்கலாம்.

எனவே இவ்வாறான பருவகாலத்திற்கு ஏற்ப எமது உணவுமுறைகள், பழக்கவழக்கங்களை மாற்றி அமைத்து இயற்கையுடன் இணைந்த வாழ்வை வாழ்ந்து ஆரோக்கியம் காப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 207





"அழகாயிருக்கிறது! இனிமேல் அப்படிப்பட்டவன் பிறக்க வேண்டுமாக்கும்! அவன் பிறந்து கல்யாண வயதை அடைவதற்கு முன்னால் நான் கிழப்பாட்டி ஆகிவிடுவேன்! என் விஷயம் இருக்கட்டும் திருமலை! வேறு ஏதாவது பேச்சு உண்டா?"

"ஏன் இல்லை? சிவஞான யோகீசுவரராகப் போவதாய்ச் சொல்லிக் கொண்டிருந்த தேவர் திடீரென்று கல்யாணம் செய்து கொண்டதைப் பற்றிப் பலரும் ஆச்சரியப்படுகிறார்கள்"

"உன் அருமைச் சகோதரி ஆண்டாளைப் போன்ற பக்த சிரோமணி ஆகப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாயே அவள் இப்பொழுது எப்படியிருக்கிறாள்?"

"அவளுக்கு என்ன குறைவு தாயே! பெரிய பழுவேட்டரையரின் அரண்மனையில் சர்வாதிகாரிணியாக ஆட்சி செலுத்தி வருகிறாள்"

"பழுவேட்டரையரின் அரண்மனையில் மட்டும்தானா? இந்தச் சோழ ராஜ்யத்துக்கே அவள்தான் சர்வாதிகாரிணி என்றல்லவா கேள்விப்பட்டேன்..!"

"அப்படியும் சிலர் பேசிக் கொள்கிறார்கள் தாயே! ஆனால் அவளை விட்டுத் தள்ளுங்கள். இந்த நல்ல நாளில் அவளுடைய பேச்சு எதற்கு? தாங்கள் 'ஆண்டாள்' பெயரைக் குறிப்பிட்டதால், எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது. ஸ்ரீவில்லிபுத்தூருக்குப் போயிருந்தேன். பட்டர்பிரான் விஷ்ணு சித்தரின் பாடல்கள் சிலவற்றைத் தெரிந்து கொண்டேன். இதைக் கேளுங்கள், அம்மா! கண்ணன் பிறந்த திரு நாளைப் பற்றிய பாடல்:-

'வண்ண மாடங்கள் சூழ் திருக் கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ணம் எதிர் எதிர் தூவிடக்
கண்ணன் முற்றம் கலந்தன றாயிற்றே!
ஓடுவார் விழுவார் உகந்தாலிப்பார்
நாடுவார், நம்பிரான் எங்குற்றான் என்பார்
பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று
ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே!'

இன்றைக்கு நம் பழையாறை நகரமும் ஆயர்பாடி போலவே ஒரே குதூகலமாயிருக்கிறது, தாயே!"

"குதூகலமாயிருக்கிறது சரிதான் ஆனால் சற்று முன்னால் வேறொரு விதமான பறை கொட்டிற்றே, அது என்ன திருமலை?"

இந்தக் கேள்விக்காகவே ஆழ்வார்க்கடியான் காத்துக் கொண்டிருந்தான்.

"யாரோ ஒற்றனாம்! தப்பித்துக் கொண்டானாம்! அவனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பரிசு கொடுப்பார்களாம்! அதையெல்லாம் பற்றி நான் என்ன கண்டேன் தாயே!"

"உனக்கு ஒன்றும் தெரியாதா? யாராயிருக்கும் என்பது பற்றிச் சந்தேகம் கூட இல்லையா?"

"மனத்தில் ஒரு சந்தேகம் இருக்கிறது ஆனால் அதைப் பற்றிப் பேசுவது அபாயம். தெரு வீதியில் நான் நடந்து வந்த போது என்னைக் கூடச் சிலர் முறைத்துப் பார்த்துக் கொண்டு போனார்கள். என்னை யாரேனும் பிடித்துக் கொண்டு போய்ப் பாதாளச் சிறையில் போட்டு விட்டால்.?"

"உன்னைப் பிடிப்பதற்குத் தலையில் கொம்பு முளைத்தவர்களாயிருக்க வேண்டும்! உன் மனத்தில் தோன்றியதை என்னிடம் சொல்லலாம் என்றால் சொல்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கருநாகபாம்பும் காகமும்



அது ஒரு அழகிய கிராமம். அக் கிராமத்தில் ஆலமரம் ஒன்று இருந்தது. அந்த ஆல மரத்தில் இரு காகங்கள் கூடு கட்டி வாழ்ந்து வந்தன.

அந்த ஆலமரத்தின் கீழ் பகுதியில் பெரிய பொந்து ஒன்று இருந்தது. அந்தப் பொந்தை ஒரு கரும் பாம்பு உறைவிடமாகக் கொண்டிருந்தது. பெண் காகம் தனது கூட்டில் முட்டைகள் இட்டு குஞ்சுகள் பொரிக்கும்.

ஆண் காகமும் பெண் காகமும் இரை தேடச் செல்லும் நேரம் பார்த்து பொந்தில் இருக்கும் அந்த பாம்பு மரத்தின் மீது ஏறிகாக முட்டைகளை தின்று விட்டு இறங்கி விடும்.

திரும்பி வந்து பார்க்கும் போது முட்டைகள் காணாமல் போய் விட்டதை கண்டு காகங்கள் மிகவும் மனவேதனை அடையும்.

ஒவ்வொரு தடவையும் பெண் காகம் குஞ்சு பொரிப்பதும், அவற்றை கருநாகம் உண்பதும் வழக்கமான நிகழ்ச்சியாகி விட்டன. ஒரு நாள் அந்த பாம்பு முட்டைகளை சாப்பிட போகும் நேரத்தில் கூட்டிற்கு வந்த பெண் காகம் பார்த்து விட்டது. காகத்தை பார்த்த பாம்பு முட்டைகளை சாப்பிடாமல் சென்று விட்டது. குஞ்சுகள் காணாமல் போவதற்கு மரத்தடிப் பொந்தில் வாழும் கருநாகந்தான் காரணம் என்பதை காகங்கள் கண்டு கொண்டன. ஆனால் காகங்களால் கருநாகத்தை என்ன செய்ய முடியும்? தலைவிதியே எனச் சில காலத்தை ஓட்டின. திரும்பத் திரும்ப தன் குஞ்சுகளை இழக்கும் அவலத்தைப் பெண் காகத்தால் சகித்துக் கொள்ள இயலவில்லை.

ஒரு நாள் பெண் காகம் ஆண் காகத்தை பார்த்துத் "நமது குஞ்சுகளையெல்லாம் ஒவ்வொரு தடவையும் கருநாகம் தின்று விடுகின்றதே ! இனியும் இதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. இந்த மரத்தை விட்டு விட்டு வேறு ஒரு பாதுகாப்பு நிறைந்த மரத்திற்கு குடிபோய் நிம்மதியாக வாழ்க்கை நடத்துவோம்" என்று கண்ணீருடன் கதறியது.

பெண் காகம் கூறியதைக் கேட்டு மன வேதனையுற்ற ஆண் காகம் தன் மனைவியை நோக்கி "உன் மனக்குமுறல் எனக்கு புரிகிறது! சில விஷயங்களை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கின்றது. நீண்ட காலமாக வசித்து வரும் இந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்குச் செல்ல என் மனம் கேட்கவில்லை. ஆனால் அதற்காக கரும்பாம்பின் அட்டூழியத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நான் கூற மாட்டேன். ஏதாவது ஒரு உபாயம் செய்து இந்த பாம்பைக் கொன்றாக வேண்டும்" என்று ஆண் காகம் கூறியது.

"இந்தக் கொடிய விஷ கருநாகத்தை நம்மால் கொல்ல முடியுமா?" என்று சந்தேகத்தோடு பெண் காகம் கேட்டது.

"கருநாகத்தைக் கொல்லும் அளவுக்கு வலிமையோ வல்லமையோ எனக்கு இல்லை என்பது உண்மை தான். ஆனால் நல்ல அறிவாற்றல் மிக்க நல்ல நண்பர்கள் பலர் எனக்கு இருக்கிறாகள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத்தின் விருப்பத்திற்கு எதிராக எந்த ஒரு மனித சக்தியும் நிற்க முடியாது! (எனவே, சோதனையான நேரங்களிலும் நேர்மையாக வாழ்வோம்) - ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நயினைத் தாயின் பெருந்திருவிழா பக்திபூர்வமாக அமையட்டும்

நயினை நாகபூஷணி தாயின் பெருந்திருவிழா இன்று (19) திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றெனப் போற்றப்படும் நயினாதீவு நாகபூசணி அம்மன் மீது மக்கள் கொண்டுள்ள பக்தியை மனித மொழிகளால் சுஹிவிட முடியாது.

தவிர, நயினை நாகபூசணி அம்மன் சமய பேதம் கடந்த உலகத்தாய்.

ஆம், இலங்கை திருநாட்டில் வாழுகின்றவர்கள் இலங்கைக்கு வருகின்றவர்கள் ஒரு தடவையேனும் நயினாதீவுக்குச் சென்று நாகபரமேஸ்வரித் தாயை வழிபட திடம் கொள்வர்.

மணிபல்லவம் என்று வியந்து போற்றப்படும் நயினாதீவு நாகபூசணித் தாய் அமுதத்தை சுரந்தளிப்பவர்.

எத்தனை இலட்சம் அடியவர்கள் அங்கு சென்றாலும் அத்தனை பேருக்கும் அன்னம் வழங்கி அமுதூட்டுகின்ற அதிசயம் வேறு எங்கும் பார்க்க முடியாத அற்புதம்.

நாகம் வந்து வழிபாடு செய்கின்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் 17ஆம் திகதி மூன்று நாகபாம்புகள் ஆலய வீதியில் வலம் வந்த அதிசயம் கண்டு நெக்குருகாதார் இல்லை எனலாம்.

அந்தளவுக்கு நயினைத் தாயின் அன்பும் அரவணைப்பும் அடியவர்களைக் காத்தருளும் தாய்மையும் அன்னம் பாலிக்கும் பாசமும் காரணமாகத் தாய் இருக்கும் இடத்துக்கு ஆன்மாக்களாகிய நாம் நாடியும் ஓடியும் செல்கின்றோம்.

சுருங்கக்கூறின், எங்கள் நயினைத் தாய் எங்களைக் காத்தருள்வாள். அவர் இருக்கையில் எங்களுக்கு எந்தக் குறையுமில்லை என்ற நம்பிக்கையோடு இலட்சக்கணக்கான மக்கள் வாழுகின்றனர் என்ற உண்மையை நினைக்கும்கால் கன்னத்தின் ஓரங்கள் நனைந்து போகும்.

அந்தளவுக்கு அலைகடல் நடுவே வீற்றிருந்து உலக ஜீவராசிகளுக்கெல்லாம் உணவளிக்கும் நயினை நாகபூசணித் தாயின் மஹோற்சவம் சிறப்பாக அமைய அனைவரும் தமது ஒத்துழைப்பை வழங்குவது கட்டாயமானது.

அதிலும் குறிப்பாக, சமகால சூழலில் எங்கும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதால், ஆலயத்துக்கு செல்கின்ற அடியார்கள் தங்க நகைகள் அணிவதை முற்றாகத் தவிர்த்து ஆலயம் செல்வது ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கான வழியாகும்.

தங்க நகை அணிந்து ஆலயத்துக்குச் சென்று வழிபடுகையில், திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டிவிட்டால், அது மிகப் பெரும் துன்பமாக அமைவதுடன் நயினைத் தாயிடம் வந்த எனக்கு இப்படியாயிற்றே என்ற வேதனையையும் தரும்.

ஆகையால் வருமுன்னர் காக்கும் வகையில் தங்க நகைகளை முற்றாகத் தவிர்த்து பக்திபூர்வமாக வழிபாடாற்ற அனைத்து அடியவர்களும் முன்வரவேண்டும்.

அதேநேரம் ஆலய மஹோற்சவம் சிறப்பாக நடைபெற காவல்துறையினரும் தமது கடமையைச் செம்மையாகச் செய்து நயினைத் தாயின் பெருந்திருவிழா பக்தியும் பண்பும் நிறைந்ததாக தெய்வீகம் பொருந்தியதாக அமைய உதவ வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

## இலங்கை வருகிறது இந்திய நீர்மூழ்கிக் கப்பல்

(கொழும்பு)

இந்திய கடற்படைக்கு சொந்தமான புத்தம் புதிய நீர்மூழ்கி கப்பல் இன்று நாட்டிற்கு வருகை தரவுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

குறித்த பயணம் 9 ஆவது சர்வதேச யோகா தினத்தை கொண்டாடும் வகையில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலய அழைப்பின் பேரில் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

"வாகீர்" என பெயரிடப்பட்டுள்ள இந்த நீர்மூழ்கிக் கப்பல் இன்று முதல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை நாட்டில் சில கடற்படைசார் செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த விஜயத்தின் போது, இந்திய நீர்மூழ்கிக் கப்பல் படைத் தளபதி மற்றும் இலங்கையின் மேற்கு கடற்படைக் கட்டளைப் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், இந்திய நீர்மூழ்கிக் கப்பலை பாடசாலை மாணவர்கள் மற்றும் இலங்கை மக்கள் பார்வையிட முடியும் என இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய கடற்படை கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கைக்கு வருகை தருவது, இந்தியாவின் பார்வையில் உள்ள இலங்கைக்கான முன்னுரிமை கொள்கை மற்றும் பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி (SAGAR) ஆகியவற்றின் அடிப்படையில் இரு அண்டை கடற்படைகளுக்கு இடையே சகோதரத்துவத்தையும் ஒற்றுமையையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## எல்லை நிர்ணய அறிக்கைக்கு சகல கட்சிகளும் எதிர்ப்பு

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கைக்கு அனைத்து கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு அநீதி இழைக்கும் வகையிலான பரிந்துரைகள் மற்றும் சில தொகுதிகள் ஒன்றிணைக்கப்பட்டும் சில தொகுதிகள் தனியாக நிர்ணயிப்பதற்கும் குறித்த அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால் அரசியல் கட்சிகளும் எதிர்ப்பை தெரிவித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் உள்ளூராட்சித் தேர்தலை தொகுதி முறைமைக்கு மாறாக பழைய தேர்தல் முறைமையின் அடிப்படையில் நடத்துவதற்கு பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் விருப்பம், தெரிவித்ததாக இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளர் பட்டியலில் நூற்றுக்கு 25 வீதத்தை இளைஞர் பிரதிநிதிகளுக்கு ஒதுக்குவதற்கான யோசனையை பாராளுமன்றில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர குறிப்பிட்டுள்ளார். (4-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** இரும்பு மதவடி, சக்களாவத்தை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நகரம், இலங்கை மின்சார சபையடி, ஒல்லிமோட்டை, **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம், மகாறம்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## பொதுப் பயன்பாடுகள் ஆ.குழுவிற்கு புதிய தலைவர்

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரின் பெயர் அரசியலமைப்பு பேரவைக்கு முன்மொழியப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பு பேரவைக்கு குறித்த பெயரை முன்மொழிந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிய அனுமதி கிடைத்த பின்னர் குறித்த பேராசிரியர் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்படுவார் என பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (4-7)

## ஊழலுக்கு எதிரான சட்டமூலத்தை எம்மால் ஏற்க முடியாது
### எதிர்க்கட்சி

ஊழலுக்கு எதிரான சட்டமூலத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஏனென்றால், திருடப்பட்ட பணத்தை மீட்கவோ, சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்கவோ போதுமான சட்டங்கள் அதில் இல்லை என அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான காரணங்களால் ஊழலுக்கு எதிரான சட்டமூலத்திற்கு ஆதரவளிக்க முடியாது என அக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊழலுக்கு எதிரான சட்டமூலத்தை எதிர்வரும் 21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்றுவது என அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த சட்டமூலத்திற்கு எந்த ஒரு பிரதிநிதியும் எதிர்ப்பை வெளியிடமாட்டார்கள் என பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## கலை வாரிதி விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையினால் இவ்வாண்டு "கலாசார விழா" இனை நடத்துவதற்கும் அவ் விழாவில் கலைஞர்களினை கௌரவிக்கும் வண்ணம் "கலை வாரிதி" விருதினை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே குறிப்பிட்ட பிரதேச செயலக எல்லைக்குள் வதியும் 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் தங்கள் கலை தொடர்பான விபரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரில் வருகை தருவதன் மூலமோ எதிர்வரும் 23.06.2023 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதேச செயலக கலாசார பிரிவில் சமர்ப்பிக்குமாறு வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளரால் கோரப்பட்டுள்ளது. (4-7)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி மாலை மஞ்சத் திருவிழாவும் ஜூலை 01 ஆம் திகதி அன்று மாலை சப்பைரதத் திருவிழாவும் 02 ஆம் திகதி காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளதாக பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4,7,136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனேடிய தமிழ் பேரவையால் 70 லட்சம் ரூபா பெறுமதியான மருந்துகள் வழங்கி வைப்பு



(வவுனியா)

இலங்கையில் தற்போது நிலவிவரும் மோசமான பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் தெற்கு ஆகிய நான்கு பிராந்தியங்களில் உள்ள ஆறு மருத்துவமனைக்கு சுமார் 70 லட்சம் ரூபா பெறுமதியான மருத்துவப் பொருட்களை கனேடியத் தமிழ் பேரவை வழங்கியுள்ளது.

அந்தவகையில் வவுனியா மருத்துவமனை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்நிகழ்வில் மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் செந்தூர்பதிராஜா, முன்னாள் வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், அமைப்பின் பிரதித் தலைவர் ரவீனா ராஜசிங்கம் மற்றும் மருத்துவமனை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (நி-6)

# வவுனியாவிலும் கறுவா செய்கை ஊக்குவிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் கறுவா பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்கோடு செய்கையாளர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வட பகுதியில் கறுவா செய்கையை ஊக்குவித்து அதனை பணப்பயிராக மாற்றும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக வவுனியா மாவட்டத்தில் கறுவா செய்கையை ஊக்குவிப்பதற்கும் அது தொடர்பான பெறுமதி சார் உற்பத்தி பொருளாக மாற்றுவது தொடர்பிலும் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளது.

இந் நிலையில் வவுனியா வைரவபுளியங்குளத்தில் கறுவா செய்கையை பயிரிடுவது அதன் பலன்கள் தொடர்பில் செய்கையாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன் செய்கை முறைகளும் காட்டப்பட்டது.

இதன்போது கறுவா செய்கையை வட மாகாணத்தில் மேம்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ள சுந்தரமூர்த்தி புவனகுமார், கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜி. ஜி. ஜெயசிங்க மற்றும் அவரது குழுவினர் கலந்து கொண்டிருந்தனர்.

கறுவா பயிர்செய்கையில் ஈடுபட ஆர்வமுள்ளவர்கள் சுந்தரம் சுரேஷ்குமார் என்பவருடன் 077 074 3133 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-250)

# 21 இறங்குதுறைகளை ஆழப்படுத்தி புனரமைக்க மீனவர்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் 21 இறங்கு துறைகள் ஆழப்படுத்தி புனரமைக்க வேண்டிய தேவை காணப்படுவதாக கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் குறித்த பிரதேசங்களில் கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகளில் நான்காயிரத்து 186 மீனவ குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 931 அங்கத்தவர்கள் வாழ்ந்துவருவதோடு சுமார் ஐயாயிரத்து 170 கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த கடற் கலங்களையும் கடற்றொழில் உபகரணங்களையும் தொழிலுக்கு நாளாந்தம் கொண்டு செல் வதிலும் கடற்றொழிலுக்குச் சென்று திரும்புவதற்கும் ஏற்ற வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் எந்த இறங்கு துறைகளும் இல்லாத நிலையில் கடற்றொழிலுக்கு சென்றுவரும் தொழிலாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த இறங்கு துறைகளை அமைத்து தருமாறு தொடர்ச்சியாக மீனவ சமூகங்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையிலும் இதுவரை குறித்த பகுதி இறங்கு துறைகள் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-315)



செய்தியாளர் "ஊடக தூதுமடல்" நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில் இடம்பெற்றது.

# தீப்பற்றிய இராணுவ முகாம்



(கண்டாவளை)

கிளிநொச்சி முட்கொம்பன் சின்னப்பல்லவராயன் கட்டுப் பகுதியில் இராணுமுகாமில் அமைந்துள்ள கட்டட தொகுதியில் நேற்று முன்தினம் மாலை தீ விபத்து சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்து மின்னொமுக்கு காரணமாக ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-315)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 220 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 550 | 350 | 400 |
| தக்காளி | 280 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 220 | 200 |
| கோவா | 280 | 250 | 300 |
| கரட் | 360 | 380 | 380 |
| பூசணி | 80 | 80 | 100 |
| புடோல் | 150 | 140 | 200 |
| வாழைக்காய் | 100 | 140 | 100 |
| சின்ன வெங்காயம் | 320 | 280 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 130 |
| பாகற்காய் | 500 | 400 | 400 |
| வெண்டக்காய் | 180 | 160 | 140 |
| கருணைக் கிழங்கு | 140 | 200 | 200 |
| பயற்றங்காய் | 550 | 350 | 300 |
| லீக்ஸ் | 320 | 280 | 380 |
| பீற்றூட் | 450 | 350 | 400 |
| கறிமிளகாய் | 380 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 1000 |
| போஞ்சி | 550 | 450 | 480 |
| கத்தரிதம்புள்ள | 120 | 150 | 150 |
| கீரை - 1 பிடி | 50 | 60 | 50 |
| தேசிக்காய் | 350 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 80 | 80 |
| இராசவள்ளி | 350 | 260 | 250 |
| வெங்காயப்பூ | 450 | 500 | 400 |
| முள்ளங்கி | 120 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 |
| வல்லாரை | 40 | 35 | 50 |
| ஈரப்பலா | 120 | 200 | -- |

# சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் எம் இனத்தை காப்போம்

### சிவசக்தி ஆனந்தன்

(நெளுக்குளம்)

சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெற்று எம்மினத்தை அழிவிலிருந்து காப்போம் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். நேற்று ஊடகங்களுக்குவிடுத்துள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஒன்றே இன்றுவரையில் சர்வதேச ஒப்பந்தமாகத் திகழ்கிறது. அதனூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட மாகாணசபை முறைமையே இலங்கை அரசியல் யாப்பின் பதின் மூன்றாவது திருத்தத்தின்கீழ் சட்ட அங்கீகாரம் பெற்ற தமிழர்களுக்கான அதிகாரமாக உள்ளது.

ஆயுதப் போராட்டம் 2009 இல் முடிவிற்குக் கொண்டு வரப்பட்ட நிலையில், சிங்கள பௌத்த பேரினவாதம் மீண்டும் தனது கோரமுகத்தை தமிழர்கள் மீது காட்டிவருகிறது.

தாயகப் பிரதேசத்திலிருந்தும் எம்மை விரட்ட சிங்கள பௌத்த பேரினவாதத்துடன் சேர்ந்து முயற்சிகளை மேலாதிக்க சக்திகள் மேற்கொள்கின்றன.

இந் நிலையில் எமது இருப்பைத் தக்க வைக்க வேண்டுமாக இருந்தால், குறுகிய கட்சிசார் அரசியல் நலன்களை முன்னிறுத்தாமல், எமது வருங்கால சந்ததி அச்சமின்றி, தமது தாயகப் பிரதேசத்தில் சகல உரிமைகளுடன் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுப்பதாகும்.

மற்றும் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெற்று எம்மினத்தை அழிவிலிருந்து காப்போம் என்பதை தியாகிகள் தினத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சபதமேற்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையருக்கு...

உள்ளவர்கள் என அடையாளம்காணப் பட்டுள்ளதாக மத்திய வங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் உணவுப் பொருட்கள், ஆடைகள் போன்றவற்றின் விலைகளின் அதிகரிப்பு மற்றும் நாட்டில் பணவீக்க நிலைமைகளின் வளர்ச்சி பாரிய அதிகரிப்பை காட்டியது.

இதனால் நாட்டின் மொத்த சனத்தொகையில் 14.3 சதவீதம் பேர் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (4-7)

## அத்தியாவசிய...

ண்டோ வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நுகர்வோர் விவகார அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம், கோதுமை மா கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் அத்தியாவசியப் பொருளாக வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

சந்தையில் கோதுமை மாவின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கோதுமை மா இறக்குமதி செய்வதற்கு உரிமம் பெறுவதை கட்டாயமாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, சந்தையில் கோதுமை மா விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கோதுமை மா அத்தியாவசியப் பொருளாகப் பிரகடனப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-7)

## நாட்டில் பரவலாக...

அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் சில இடங்களில் மழை பெய்யக் கூடும் என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், வடமத்திய மாகாணத்திலும் ஊவா மாகாணம், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு நேரங்களில் மழை பெய்யக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## கூட்டணிக் கட்சி...

களாகவே கூட்டணிக் கட்சி தலைவர்கள் செயற்படுவார்கள் எனவும் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத் தெரிவு மற்றும் யாப்பு திருத்தம் தொடர்பில் இறுதி தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக குறித்த கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் ரெலோ அமைப்பின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப் பினருமான த.சித்தார்த்தன், ஈபிஆர்எல்எப் கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சிறிகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் உட்பட நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் 15 பேர் குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதன்போது, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டும் என அங்கு வருகை தந்த ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப் ஆகிய கட்சிகள் யோசனையை முன்வைத்த போது அதனை கடுமையாக எதிர்த்த தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி சிறிகாந்தா, தலைவர் வேண்டாம் எனவும் இணைத்தலைவர்களாக தொழிற்பட வேண்டும் எனவும் வாதிட்டு தனது கருத்தை முன்வைத்தார்.

இது தொடர்பில் கலந்து கொண்ட கட்சிப் பிரதிநிதிகளுக்கிடையில் பல் வேறு கருத்துப் பரிமாற்றங்கள் இடம் பெற்று இறுதியில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு தலைவர் இல்லை எனவும், கூட்டணிக்கட்சிகளின் தலைவர்களாக கட்சியின் இணைத் தலைவர்களாக செயற்படுவர் எனவும் நிறைவேற்றுக் குழுவில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதன்படி பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், சிறிகாந்தா மற்றும் வேந்தன் ஆகியோர் இணைத் தலைவர்களாக செயற்படுவர் என முடிவு எட்டப்பட்டது. (4-7,250)

## பெரமுனவில்...

பெரமுனவை சேர்ந்த 25க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஸோக அபேசிங்ஹ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவை சேர்ந்த 25 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளதாகவும் அஸோக அபேசிங்ஹ மேலும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதற்கு ஏற்கனவே இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும், டலஸ் அழகப்பெரும தலைமையிலான குழு அங்கு தீவிரமாக செயற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அந்த குழுவிற்கு மேலதிகமாக மேலும் பல குழுக்கள் எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (4-7)

## நாகபூசணி...

பூஷணி அம்பாள் ஆலயசோபகிருது வருஷ மஹோற்சவம் இன்று திங்கட் கிழமை கொடியேற்றத்துடன் பக்திபூர்வமாக ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும் மகோற்சவம்தனில் எதிர்வரும்25ஆம்திகதி வாயுபட்சணி சர்ப்பத்தில் அம்பாள் எழுந்தருளலும் 29ஆம் திகதி ஆலய வரலாறுடன் தொடர்புடைய கருட/சர்ப்ப பூஜையும் 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவந்தனில் முத்தேர் பவனியும் மறுநாள் கங்காதரணி தீர்த்தக் கேணியில் அம்பாளுக்கு தீர்த்தோற்சவமும் சிறப்புற இடம்பெறவுள்ளது.

மறுநாள் அம்பாள் அழகிய மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் எழுந்தருளி கடல் தனிலே தெப்போற்சவமும்பக்தி பூர்வமாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## ஒன்று புத்த...

அண்மையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான ஜனாதிபதியின் கலந்துரையாடலின்போது புத்த சாசன, கலாசார அமைச்சு தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

பௌத்த சாசனம் இன்று நேற்றல்ல நீண்டகாலமாகவே பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகிறது. பௌத்த பிக்குகளுக்கு எதிர்ப்புகளும் காணப்படுகிறது.

நம் நாட்டில் இரு சட்டங்கள் காணப்படுகின்றன. அந்தச் சட்டங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

புத்தரின் சட்டம் ஒரு பக்கம் இருந்தாலும், மறுபுறம் அரச சட்டம் இருக்கிறது. இரண்டையுமே நாம் அனுசரித்துத்தான் செல்ல வேண்டும்.

ஆனால் இதனை சிலர் தவறாக புரிந்துகொள்கின்றார்கள்.

எனினும் இந்த சட்டமூலங்கள் இரண்டையும் கருத்தில்கொண்டே நாங்கள் செயற்படுகிறோம் என அவர் தெரிவித்தார். (4-7)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 18/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1604
வெற்றி இலக்கங்கள்: கும்பம் 1 7 2 9 1 8

### தன நிதானய

திகதி - 2023.06.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1179
R 02 15 17 80

### கொவிசெத

திகதி 2023.06.18 — சீட்டிழுப்பு இலக்கம் 3391
W 30 34 59 75

### மெகா பவர்

திகதி 18/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1497
V 25 07 13 71 78

### ஹந்தஹன

சீட்டிழுப்பு திகதி 2023.06.18
சீட்டிழுப்பு இலக்கம் 458
விருச்சிகம் 27 28 48 49 விருச்சிகம்

### மஹஜன சம்பத

திகதி 2023/06/18
சீட்டிழுப்பு இலக்கம் 5149
L 1 8 3 8 8 9

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2123 — நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.18 — தினம் ஞாயிற்றுக்கிழமை
E 13 19 29 52
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,039,960/-

### சனிதா

ஞாயிற்றுக்கிழமை — சீட்டிழுப்பு திகதி: 2023.06.18 — வெற்றி வாரம்: 4284
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,941,016.10
வெற்றி இலக்கங்கள் 10 26 52 56 — S

### சசிரி

வெற்றி வாரம் 338 — சீட்டிழுப்பு திகதி 2023.06.18
வெற்றி இலக்கங்கள் 01 47 50 — கபிலம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,391,700/-

### ராசி

திகதி 2023-06-18 — வெற்றி வாரம் 3835
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,780,845.60
வெற்றி இலக்கங்கள் 21 41 54 57
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 8,109,400/-

### லக்ன வாசனா

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 15 60 69 76 77
சீட்டிழுப்பு வாரம் 1299 — திகதி 2023.06.18 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 338,830,214.20

### அட கோடிபதி

ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம்: 1949 — சீட்டிழுப்பு திகதி: 2023.06.18
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 52,662,098.20
வெற்றி இலக்கங்கள் 04 43 46 48 — A

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16009)

076 825 7716 (ஆகாஸ்)

நாராயண தைலம்

சகலவிதமான நரம்புகள் தொடர்பான நோய்கள், பாரிசவாதம் மற்றும் குருதிச்சுற்றோட்டத்தினை சீர்செய்வதற்கும் கடுமையான நோவுக்கும் பயன்படுத்தலாம்.

நாராயண தைலம் NARAYANA THILAM (C-6770)

MANUFACTURED BY :
SRILANKA AYURVEDIC DRUGS CORPORATION

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 2567

BEACON STUDY CENTRE

வதிரி | கரவெட்டி

A/L 2025

கணித, உயிரியல் தொழில்நுட்ப பிரிவுகள்

ஆரம்பம்
22.06.2023(வியாழன்)
காலை 8.00 மணி

(C-6772) நிர்வாகி

A/L Chemistry
personal Class
English medium
(16004)
076 387 1033

VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

VISA
• STUDENT VISA • TOURIST VISA
• SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு
இலங்கை விசா நீடித்து தரப்படும் (C-6774)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

## தூங்கிக் கொண்டிருந்த கணவனை தீ வைத்து எரித்த மனைவி

(கொழும்பு)

பிலியந்தலை மொரட்டுமுல்ல, சமரகோன் பிரதேசத்தில் மனைவி தனது கணவருக்கு தீ வைத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குடும்ப தகராறு காரணமாக மனைவி நேற்று அதிகாலை 3 மணியளவில் கணவருக்கு தீ வைத்துள்ளதாக மொரட்டுமுல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மொரட்டுமுல்ல பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில், குறித்த பெண் நீண்ட நாட்களாக வேறு ஒருவருடன் தொடர்பில் இருந்து வந்ததாகவும்.

அதனால் தம்பதியினருக்கு இடையில் அவ்வப்போது தகராறுகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து கணவன் தூங்கிக் கொண்டிருந்த போது மனைவி தீ வைத்து எரித்ததில் அவரது கால்கள் முற்றாக எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(4-7)

SINCE 1963
சதாபொன்ஸ் கல்வி நிலையம்
மாலிசந்தி, அல்வாய்.

A/L வர்த்தகப் பிரிவு - 2025
ஆரம்பம் - 24.06.2023 காலை 8.00 மணி

கணக்கீடு - திரு.V.பகீரதன்
வணிகக்கல்வி - திரு.T.லோகேஸ்
பொருளியல் - திரு.V.ஜெகதீஸ்
2023;2024 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

துரித மீட்டல் வகுப்பு ஆரம்பம் 01.07.2023 காலை 8.00 மணி

அனுமதிகளைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.
077 309 5176, 077 925 0105, 021 226 3206 (C-6771)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு (C-6774)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்புடையீர்!
கடந்த 23.05.2023 செவ்வாய்க்கிழமை
அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் அப்பையா இரத்தினசிங்கம்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (20.06.2023) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 22.06.2023 வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி, சமூக வலைத்தளங்கள், பனர் பதாதைகள் மூலம் அனுதாபச் செய்திகளை தெரிவித்தவர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நல்லூர். (C-6775) இல்லம் - குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.